# பட்டினப்பாலை காட்டும் உவமைகள்

*முனைவர் பேரா. க. அழகர்*
முதல்வர், மகாத்மா காந்தி கலை மற்றும்
அறிவியல் பெண்கள் கல்லூரி, சோலைசேரி

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: செப்டம்பர்

வருடம்: 2022

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v10iS1-5199

## முன்னுரை

சங்க இலக்கியத் தொகுப்பில் நெடும்பாடல்கள் பத்தின் தொகுப்புப் பத்துப்பாட்டு என அழைக்கப்படுகிறது. பட்டினப் பாலையின் ஆசிரியர் கடியலூர் உருத்திரங் கண்ணனார. பட்டினப் பாலையின் பாட்டுடைத் தலைவன் கரிகால் பெருவளத்தான். இந்நூல் 301 அடிகளை உடையது. பாலைத்திணையைப் பற்றியது. இந்நூல் ஆசிரிய அடிகள் இடையிடையே விரவிவரப்பெற்று வஞ்சிப்பாவில் அமைந்துள்ளது. இதனை வஞ்சி நெடும் பாட்டு என்பர். காவிரிப் பூம்பட்டினத்தைச் சிறப்பித்துக் கூறும் பாலைப்பாட்டாக விளங்குவதால் இந்நூல் பட்டினப்பாலை என்னும் பெயரைப் பெற்றது என்பர். இந்நூலைப் பாடிய கடியலூர் உருத்திரங்கண்ணனாருக்குக் கரிகால் பெருவளத்தான் பதினாறு நூறாயிரம் பொற்காசுகள் பரிசளித்தான். இந்நூல் ஆறு அடிகள் மட்டுமே. அகம் பற்றியன. மற்ற 295 அடிகள் காவிரிப்பூம்பட்டினம் பற்றியும், கரிகால் பெருவளத்தான் பற்றியும் பேசுகின்ற புறம் சார்ந்தவையாகும். இந்நூல் சோழ நாட்டின் சிறப்பு, கரிகாலனின் சிறப்பு அக்கால மக்களின் சிறப்பு, பழக்கவழக்கங்கள், பண்பாடு, அரசாட்சி, போர்முறை, வணிகம், விளையாட்டு, சமயம், நடுகற்கள், வானியல், உவமைகள் போன்ற செய்திகள் இடம் பெற்று உள்ளன. அவற்றுள் பட்டினப்பாலை காட்டும் உவமைகள் என்னும் தலைப்பில் ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## உவமை – பொருள் விளக்கம்

உவமை என்பது பொருளைத் தக்க ஒப்புமை கொண்டு விளக்குவதாகும். ஒரு பொருளை மற்றொரு பொருளோடு குணத்தாலோ, தொழிலாலோ, பயனாலோ ஒத்திருப்பதாக வர்ணிப்பதே உவமையாகும். இக்கருத்தையே க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி

**“இணையாகக் காட்டும் ஒப்புமை” என்கிறது (ப. 152)**

ஒரு பொருளோடு ஒரு பொருளை ஒப்புமை கூறல் என்கிறார் பேராசிரியர்.

தொல்காப்பியர் உவமையை வினையுவமம், பயன்உவமம், மெய் உவமம், உருஉவமம் என நான்கு வகையாகக் குறிப்பிடுவதைக் காணலாம்.

வினை, பயன், மெய், உரு என்ற நான்கே வகைபெற வந்த உவமைத் தோற்றம். - தொல்-உவமையியல்-நூ : 1222

இக்கருத்தையே தண்டி ஆசிரியர் உவமையைப் பண்பு, தொழில், பயன் என மூன்று வகையாகக் குறிப்பிடுவதைக் காணலாம்.

**"பண்பும் தொழிலும் பயனுமென் றிவற்றின்**
**ஓன்றும் பலவும் பொருளோடு பொருள்**
**ஓப்புமை தோற்றச் செப்புவது உவமை"**
**(தண்டி - நூல்-31)**

**சான்று**

புவியன்ன மறவன் - வினை
மேகம் போலும் கை - பயன்
துடியிடை - மெய்
பொன்மேனி - உரு

**உவமையின் பயன்**

தெளிவாகத் தெரியானவற்றை நன்கு தெளிவு படுத்திக் காட்டவும், தெரிந்தை மேலும் மேலும் அழகுறக் கூறவும் பயன்படுவது உவமையாகும். உவமைகள் கருத்தினைத் தெளிவாக உணர்வதற்குப் பெரிதும் பயன்படுகின்றன.

"புலன் அல்லாதன புலனாதலும் அலங்காரமாகிக் கேட்டார்க்கு இன்பம் பயத்தலும்" உவமை என்கிறார் இளம்பூரனார்.

"சிறந்த உவமை பொருளின் தன்மையை விளக்குவதோடு அதனைச் சிறப்பிக்கவும் வேண்டும்" என்கிறார் ஜான்சன்.

எனவே கவிதை நன்கு சிறப்புற்று விளங்க உதவுவன உவமை, உருவகம் முதலிய அணிகளாம். உவமை என்பது இலக்கியத்தில் எடுத்தாளப்படும் ஓர் உத்தியாகும். உவமை இல்லாத இலக்கியங்கள் உப்பில்லாத உணவு போல் அமைந்து விடும் என்பர்.

**படகுகளுக்குக் குதிரைகளை உவமை கூறல்**

உமணர்கள் வெள்ளை உப்பை விலைகூறி விற்றுப் பண்ட மாற்றாகத் தாங்கள் பெற்ற நெல்லை ஏற்றிக் கொண்டு வந்த வலிமை வாய்ந்த படகுகளைக் கட்டுத்தறியால் குதிரைகளைப் பிணிப்பது போல, உப்பங்கழியைச் சார்ந்த தறிகளில் கட்டியிருப்பர். அதாவது அவர்கள் உப்பங்கழிகளில் வரிசையாக நிறுத்திய படகுகளின் தோற்றம், பந்திகளில் நிற்கும் குதிரைகளைப் போன்றதாகும் என்கிறார் கடியலூர் உருத்திரங்கண்ணனார்.

**"வெள்ளை உப்பின் கொள்ளை சாற்றி**
**நெல்லொடு வந்த வல்வாய்ப் பஃறி**
**பணைநிலைப் புரவியின் அணைமுதல் பிணிக்கும்"**
**(பட்டினப்பாலை - 29-31)**

**மழையை ஏற்றுமதி இறக்குமதிப் பொருள்களுக்கு உவமை கூறல்**

கடல்நீர் வழியாக பிற நாட்டுப் பொருள்களை நிலத்தில் இறக்கினர். உள்நாட்டுப் பொருள்களை நீர் வழியா கச் செல்லக் கப்பலில் ஏற்றினர். இதற்கு அருமையான உவமைகைக் கூறுகிறார் கடியலூர் உருத்திரங்கண்ணனார்.

மேகங்கள் கடலில் முகந்த நீரை மலையில் பொழிந்தன என்றும் மலையில் பொழிந்த நீர் ஆறாக மாறி மீண்டும் கடலில் சென்று பாய்ந்தது என்றும் கார்காலத்து நிகழ்ச்சிகளை உவமையாகக கூறுவதைக் காணலாம்.

**"வான் முகந்த நீர் மலைப் பொழியவும்**
**மலைப் பொழிந்த நீர் கடல் பரப்பவும்**
**மாரி பெய்யும் பருவம் போல**
**நீரினின்றும் நிலத்து ஏற்றவும்**
**நிலத்தினின்று நீர்ப்பரப்பவும்**
**அளந்தறியாப் பல பண்டம்"**
**(பட்டினப்பாலை பா. 126-131)**

**ஆட்டுக்கிடாய்கள் மற்றும் ஆண் நாய்களுக்கு மான்களை உவமை கூறல்**

கூர்மையான நகங்களையுடைய ஆண் நாய்களும், ஆட்டுக்கிடாய்களும் பண்ட சாலையில் கிடக்கும் பொருள்களைக் கொண்ட பொதிகள் அடுக்கிய போர்களில் ஏறிக் குதித்து விளையாடும் காட்சியானது மலைப்பகுதிகளில் தாவி ஓடும் வருடை மானின் தோற்றம் போல் காணப்பட்டதாக உவமை கூறுவதைக் காணலாம்.

***"பொதி மூடைப் போர் ஏறி***
***மழை ஆடு சிமைய மால்வரைக் கவாஅன்***
***வரையாடு வருடைத் தோற்றம் போலக்***
***கூர்உகிர் ஞமலிக கொடுந்தாள் ஏற்றை***
***ஏழகத் தகரோடு உகளும் முன்றில்"***

***(பட்டினப்பாலை - பா. 135 - 141)***

**துகிற் கொடிகளுக்குக் கரும்பின் பூவை உவமை கூறல்**

வெண்மணலையுடைய காட்டாற்றின் கரையில் வளர்ந்துள்ள அழகுடைய கரும்பின் வெண்ணிறப் பூக்களைப் போல, கடைத் தெருவின் இருபுறமும் கால்களை ஊன்றிக் கொடிகள் பறக்கவிடப்பட்டன.

***"மலர் அணி வாயில் மலர்தொழு கொடியும்***
***வருபுனல் தந்த வெண்மணல் கான்யாற்று***
***உருகெழு கரும்பின் ஒண்பூப்போலக்"***

***(பட்டினப்பாலை - பா 160-162)***

**வணிகர்களின் நடுவு நிலைமைக்குப் பகலாணியை உவமை கூறல்**

காவிரிப் பூம்பட்டினத்தில் வாழும் வணிகர்கள், உழவுத் தொழிலை விரும்பிச் செய்யும் உழவர்களின் நீண்ட நுகத்தடியில் நடுவில் தைக்கப் பட்டுள்ள பகலாணி போல, நடுவு நிலை என்ற குணம் நிலைபெற்று விளங்கும் நல்ல உள்ளம் உடையவர் ஆவர். குடிக்குப் பழி என்று அஞ்சி உண்மையைப் பேசுவர்.

***"நெடுநுகத்துப் பகல் போல்***
***நடுவு நின்ற நல்நெஞ்சினோர்***
***வடு அஞ்சி வாய் மொழிந்து"***

***(பட்டினப்பாலை - பா. 206 - 208)***

**புலிக்குட்டிக்குக் கரிகால் பெருவளத்தானை உவமை கூறல்**

கூர்மையான நகங்களையும், வளைந்த வரிகளையும் உடைய புலிக்குட்டி, கூட்டுக்குள் அடைபட்டு வளர்ந்தது போலத் திருமாவளவனை அவனுடைய பகைவர் காவலில் சிறைப்படுத்தினர்.

***"கூர் உகிர்க் கொடுவரிக் குருளை***
***கூட்டுள் வளர்ந்தாங்கு***
***பிறர் பிணியபத்து இருந்து"***

***(பட்டினப்பாலை - 221-222)***

**ஆண் யானைக்குத் திருமாவளவனை உவமை கூறல்**

பெரிய கையை உடைய யானை தன்னை அகப்படுத்திய குழியின் ஏறுதற்கரிய கரைகளைத் தன் கொம்பால் குத்திக் குழியைத் தூர்த்து வெளிப்பட்டுத் தன்னுடைய பெண்யானையை அடைவது போலத் திருமாவளவன்தன்னுடைய பகைவர்களின் நெருங்கிய காவலாகிய வாட்படையை வென்று அவர்தம் காவலிருந்து நீங்கி வெளிப்பட்டு அச்சம் பொருந்திய அரச உரிமையை முறைப்படி பெற்றான்.

***"பிறர் பிணியகத்து இருந்து பீடுகாழ் முற்றி***
***அருங்கரை கவியக் குத்திக் குழி கொன்று***
***பெருங்கை யானை பிடிபுக்காங்கு***
***நுண்ணிதின் உரை நாடி நண்ணார்***
***செறிவுடைத் திண்காப்பு ஏறி வாள்கழித்து***
***உருகெழு தாயம் ஊழின் எய்திப்"***

***(பட்டினப்பாலை - பா. 221-227)***

**மாளிகையை - யானைக்கு உவமை கூறல்**

காவிரிப்பூம்பட்டினத்தில் அகன்ற உணவுச் சாலைகள் இருந்தன. அவற்றில் சோற்றை வடிக்கும் போது, ஒழுகும் கஞ்சி ஆறுபோல எங்கும் பரவி ஓடும்ட. அதனை உண்ண வரும் காளைகள் தம்முள் மோதிக் கொள்வதால்,

அக்கஞ்சி சேறாக ஆகும். பல தேர்களும் அவ்வழியே செல்லுவதால் அச்சேறானது உலர்ந்து புழுதியாக மாறி மாளிகையின் மீது படிந்தது. அந்த மாளிகைகள் பார்ப்பதற்கு வெண்ணீற்றை மேலே பூசிக் கொண்ட களிறுபோலக் காட்சி அளித்தன.

**"அறம் நிலைஇய அகனட்டிற்**
**சோறு வாக்கிய கொழுங்கஞ்சி**
**யாறுபோலத் பரந்தொழுகி**
**ஏறு பொரச் சேறாகித்**
**தேரோடத் துகள் கெழுகி**
**நீராடிய களிறுபோல**
**வேறுபட்ட வினை ஓவத்து**
**வெண்கொவில் மாசு ஊட்டும்"**

***- (பட்டினப்பாலை - பா - 43-52)***

***நடு கல்லிற்குக் குடிசைகள் உவமை கூறல்***

நடுகல்லில் தெய்வமாக விளங்கும் ஒருவனுக்கு வைக்கப்பட்டுள்ள கல்லைச் சுற்றிக் கேடயப்படை வேலிபோல வரிசையாக நிறுத்தப்பெறும். அவற்றைச் சுற்றி வேல்கள் ஊன்றப்பெறும். அதுபோலப் பரதவர் வாழிடங்களான குறுகிய கூரைகளைக் கொண்ட குடிசைகள் இருந்தன.

**"கிடுகு நிறைந்து எஃகு ஊன்றி**
**நடுகல்லின் அரண்போல"**

***- (பட்டினப்பாலை பா. 78-79)***

***மாடத்துக்கு மலையும் மகளிரின் கைகளுக்குக் காந்தளும் உவமை கூறல்***

மாடங்களில் இருந்து மகளிர் கைகூப்பி வணங்கும் காட்சி மலைகளில் காந்தள் பூத்தது போல் தோற்றம் அளிக்கிறது.

**"காந்தள் அம் துடுப்பின் கவிகுலை அன்ன**
**செறி தொடி முன்கை கூப்பி"**

***- (பட்டினப்பாலை - 153-154)***

மாடத்துக்கு மலையும், மகளிரின் கைகளுக்குக் காந்தளும் உவமை கூறப்பட்டுள்ளது.

காவிரி ஆறு கடலில் கலக்கும் காட்சிக்கு, கரிய மலையைச் சேர்ந்த செந்நிற மேகமும், தாயின் மார்பைத் தழுவிய குழந்தையும் உவமை கூறப்பட்டுள்ளது.

**மாமலை அணைந்த கொண்மூப் போலவும்**
**தாய்முலை தழுவிய குழவி போலவும்**

***- (பட்டினப்பாலை - பா. 95-96)***

## முடிவுரை

கடியலூர் உருத்திரங்கண்ணனார் தாம் கூற வேண்டிய கருத்துக்களை பிறர் எளிமையாக அறியும் பொருட்டும், தெளிவாக உணர்ந்து கொள்ளும் பொருட்டும் தமது கவிதைகளில் உவமைகளைப் புகுத்தி எழுதி உள்ளதை அறிய முடிகிறது.